தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை

ஆனி 11, திருவள்ளுவர் ஆண்டு—2055

2024 ஜூன் 25, செவ்வாய்க்கிழமை

சென்னை, புனித ஜார்ஜ் கோட்டையிலுள்ள சட்டமன்றப் பேரவை மண்டபத்தில் மாண்புமிகு பேரவைத் தலைவர் **திரு. மு. அப்பாவு** *அவர்கள் தலைமையில் காலை 9-30 மணியளவில் பேரவை கூடியது.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்:

"மருந்தாகித் தப்பா மரத்தற்றால் செல்வம்
பெருந்தகை யான்கண் படின்."

பிறருக்கு உதவிடும் பெருந்தன்மையாம் ஒப்புரவு உடையவனிடம், செல்வம் சேர்ந்தால் அது ஒரு நல்ல மரத்தின் எல்லா உறுப்புகளும் மருந்தாகப் பயன்படுவது போன்றதாகும்.

1. வினாக்கள்—விடைகள்

உடுக்குறியிட்ட வினாக்கள்

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வினாக்கள்-விடைகள். (குறுக்கீடுகள்) வினா வரிசை எண் 81, (குறுக்கீடுகள்)*

(எதிர்க்கட்சித் தலைவர் திரு. எடப்பாடி கே. பழனிசாமி உள்ளிட்ட அனைத்து அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழக உறுப்பினர்கள் கோஷமிட்டுக் கொண்டிருந்தனர்.)

மாண்புமிகு உறுப்பினர் திரு. வி.ஜி. இராஜேந்திரன், (குறுக்கீடுகள்) மாண்புமிகு நகராட்சி நிர்வாகத் துறை அமைச்சர் அவர்கள். (குறுக்கீடுகள்)